# பாவம், பாவங்கள், பாவப்பிரமாணம்.

## ( மனுக்குலத்தின் மூன்று முக்கிய பிரச்சினைகளும், தேவனுடைய தீர்வும் )

அன்பு சகோதர சகோதரிகளுக்கு, இயேசுவின் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

உலகத்தின் சகல பிரச்சினைகளுக்கும் காரணம் பாவம். பாவம் என்கிற அடிப்படை பிரச்சினை தீர்க்கப்படாமல் அதனால் எழுகிற பிரச்சினைகளை தீர்த்து வைப்பது என்பது முடியாத காரியம். மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழும் ஒரு விசுவாசிக்கும் இருக்கிற ஒரு மகாப்பெரிய பிரச்சினை பாவம். அவர் பாவம் செய்ய வேண்டாம் என்று இருக்கிறவர்;பாவத்தை வெறுக்கிறவர்;பாவம் செய்யாமல் இருக்கும்படியாக சகல காரியங்களையும் செய்கிறவர்;பாவத்தின் விளைவுகளை நன்கு அறிந்தவர்; பாவம் செய்யக்கூடாது... பாவம் கொடியது...பாவத்தின் சம்பளம் மரணம்...பாவம் கொடிய விளைவுகளை உருவாக்கும்...பாவம் நரகத்துக்கு செல்ல வைக்கும்...பாவம், தேவனை உங்களை விட்டு விலகிச்செல்ல வைக்கும்... என்ற போதனைகளை தவறாமல் கேட்கிறவர். ஆனாலும் பல சமயங்களிலும், அறிந்தோ அறியாமலோ பல பாவங்களை செய்து விடுகிறார். பின் குற்ற உணர்வினால் குத்தப்பட்டு, மனசாட்சியினால் வாதிக்கப்பட்டு "தைரியமாய் கிருபாசனத்தண்டையில்" செல்ல முடியாமல் தவிக்கிறார். வேதனைப்படுகிறார், விரக்தியடைகிறார், தன்னைத்தானே வெறுக்கிறார், நொந்து போகிறார், ஒடிந்து போகிறார். சாத்தானும் தன் பங்குக்கு வந்து " நீ பாவம் செய்து விட்டாய்.. நீ பாவிதான்...நீ ஒரு போதும் நீதிமான் ஆக முடியாது... வேதாகமத்தில் சொல்லப் பட்டிருக்கிறபடி உன்னால் ஜீவிக்க முடியாது...அவரைப்பார், இவரைப்பார், அப்படித்தான் நீயும் ஆகுவாய்... உன்னால் வல்லமையான நல்ல தேவ பிள்ளையாக வாழ முடியாது... தேவன் உன்னை உபயோ கிக்க முடியாது " என்பது போன்ற காரியங்கள் பலவற்றை சொல்லி சோர்ந்து போக செய்கிறார். இதனால் அந்த நல்ல விசுவாசி விழுந்து, எழுந்து, விழுந்து, எழுந்து .....வாழ்ந்து கொண்டிருக்கிறார். "பாவம் செய்யக் கூடாது" என்கிற போதனைகளை அவர் எங்கும் கேட்கிறார், ஆனால் "எப்படி பாவம் செய்யாமல் இருப்பது ?" என்று துணிந்து கேட்பதற்கு அவருக்கு தைரியம் இல்லை. அப்படி கேட்டால் நான் பாவம் செய்கிறேன் என்று மற்றவர்கள் நினைத்து விடுவார்களோ என்று அவருக்கு பயம். பாவம் செய்யக்கூடாது என்று தீர்மானம் செய்கிறார், பின் "எப்படி பாவம் செய்யாமல் இருப்பது? " என்று அறியாததால் மீண்டும் பாவம் செய்து விடுகிறார்.

ஒரு விசுவாசி பாவம் செய்யாமல் இருக்க வேண்டுமானால்,"பாவத்தை பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது ?" என்ற அறிவு அவருக்கு இருக்க வேண்டும். பாவம் என்றால் என்ன ? பாவ மன்னிப்பு என்றால் என்ன ? பாவத்தின் விளைவுகள் என்ன ? பாவம் என்ற பிரச்சினைக்காக தேவன் என்ன தீர்வு கண்டிருக்கிறார் ? பாவம் செய்யாமல் வாழுவது எப்படி ? என்பது போன்ற அடிப்படை கேள்விகளுக்கு, வேதாகமத்தில் சொல்லப் பட்டிருக்கும் பதில்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். பாவத்தை பற்றி உலகம் சொல்வதை கேட்பது, பாவத்தை பற்றி மனம் திரும்பியவர்கள் சொல்வதை கேட்பது, பாவத்தை பற்றி கடுமையான விமர்சனங்களை கேட்பது, பாவத்தை விடுவேன் என்று தீர்மானங்கள் எடுப்பது, இவற்றினால் மாத்திரம் பாவம் செய்யாமல் வாழ முடியாது. இவை அனைத்தும் மனித முயற்சிகள் ஆகிவிடும். பாவத்தை பற்றி வேதாகமம் சொல்வதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும், நீதிகரணத்தை பற்றி வேதாகம் என்ன சொல்கிறது என்பதை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அப்போது ஒரு விசுவாசி பாவம் இன்றி நீதிமானாக, தைரியமாய் கிருபாசனத்தண்டையில் எப்போதும் செல்கிறவராக, வல்லமை உள்ள விசுவாசியாக வாழ முடியும்.

**இந்த வேதபாடத்தின் மூலமாக பாவம், பாவங்கள், பாவப்பிரமாணம் ஆகிய காரியங்களை பற்றி நன்கு அறிந்து கொண்டு பாவம் செய்யாமல் தேவனுக்கு பிரியமான விதத்தில் ஜீவிப்போம்.**

வேதாகமத்தின் படி, உண்மையிலேயே பாவம் செய்யாமல் வாழ விரும்புகிற ஒரு விசுவாசி, முதலில் வேதாகமம் பாவம் சம்பந்தமாக உபயோகிக்கிற சில வார்த்தைகளின் அர்த்தங்களை நன்கு மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வேதாகம வசனங்களை சரியாக நம் வாழ்க்கையில் உபயோகிக்க முடியும். இப்போது சில முக்கியமான வார்த்தைகளின் அர்த்தங்களை பார்ப்போம்.

### பாவம்.

**W.E. வைன்** என்ற, கிரேக்க மொழிபெயர்ப்பில் தலை சிறந்த வேத பண்டிதர் தன் " வேத வார்த்தைகளின் அகராதி " யில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

புதிய ஏற்பாட்டில் பாவம் என்ற வார்த்தையை குறிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ள சில கிரேக்க வார்த்தைகளை பார்ப்போம்.

1. " ஹமர்ஷியா ". ( பெயர்ச்சொல் ). இந்த வார்த்தையின் அர்த்தம் " **குறி தப்புவது** ". ஆனால் புதிய ஏற்பாட்டில் இந்த சொல் இலக்கணத்தில் இந்த வார்த்தை உபயோகிக்கப்பட வில்லை. புதிய ஏற்பாட்டில் இந்த ஹமர்ஷியா என்கிற வார்த்தை "**நீதி நெறியில் இருந்து சாய்வது** " என்ற அர்த்தத்தை குறிக்கும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வார்த்தை கீழ்க்கண்ட அர்த்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**அ.** இவ்வார்த்தை "பாவத்தை" ஒரு " **பிரமாணமாக** " "மூலக்கோட்பாடாக" **"கிரியைகளின் உற்பத்தி ஸ்தானமாக"**, **"நம்முள்ளில் இருந்து நம் செய்கைகளை நடத்துகிற மூலப்பொருளாக"** **( a principle or source of action, or an inward element producing acts** )சித்தரிக்கும்படியாக கீழ்க்கண்ட இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. *ரோமர்; 3;9, 5;12,13,20. 6;12 7;7,9,11,13*

**ஆ.** இவ்வார்த்தை "பாவத்தை" ஒரு " **ஆளும் சக்தியாக** " ரோமர்; 6;6 ல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே "பாவம்" **நம் சரீரத்தின் மூலமாக கிரியைகளை நடப்பிக்கிற ஒரு ஆளும் சக்தியாக** சித்தரிக்கப்பட்டுள்ளது.
கீழ்க்காணும் வசனங்களில் "இந்த ஆளும் சக்திக்கு" ஒரு **"மானிட உருவம்"** கொடுக்கப்பட்டுள்ளது. *ரோமர்; 5;21 6;12,14,17 7;11,14,17,20,23,25 8;2 1 கொரி; 15;56 எபிரேயர்; 3;13 11;25 12;4 யாக்;1;15.*

**இ.** பாவத்தை **ஒரு உறுதியான தப்பு செயலாக.** *யோவான்; 8;21,34,46 9; 41. 15;22,24 19;11 ரோமர்; 8;3 எபி;9;26 10; 6,8,18 13;11 1யோவான்; 1;7,8 3;4 ரோமர்; 1;32 கலா; 5;21 பிலிப்; 4;9 1 பேது; 4;9*
பாவத்தை **"பாவ நிலமையை"** குறிக்கிற சொல்லாக. *1 கொரி; 15;17, யோவான்; 1;29*
பாவத்தை ஒரு **"தொடரும் நிலமையை"** குறிக்கிற சொல்லாக. *1 தெச; 2;16 1 யோவான்; 5;16*

**ஈ;** பாவத்தை ஒரு **"பாவ செய்கையாக"**; *மத்; 12;31; அப்; 7;60; யாக்; 1;15; 2;9; 4;17; 5;15,20; 1 யோவான்; 5;16*

2. ஹமர்டமா; ( பெயர்சொல்; )
**தேவ நீதிக்கு கீழ்ப்படியாத ஒரு செயலை** குறிக்கிற விதமாக( பாவங்கள் ). பன்மையில் உபயோகிக்கப்பட்டுள்ள இடங்கள். *மாற்கு; 3;28,29 ரோமர்; 3;25, 1 கொரி; 6;18. 2 பேது; 1;9.*
" **பரப்டோமா** " என்னும் வார்த்தை இதே அர்த்தத்தில் ( பாவங்கள் ) கீழ்க்கண்ட இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. *எபே; 1;7 2;5 கொலோ; 2;13 யாக்; 5;16 .*

3. அனமர்டெடோஸ். " **பாவமில்லாத** " என்ற அர்த்தத்தில். யோவான்; 8;7. ( பாவ செய்கை இல்லாத )

4. ஹமர்டனோ. ( வினைச்சொல் ).
இந்த வார்த்தை **குறிதப்புவது** என்ற அர்த்தத்தில் **பாவம்** என்று புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**அ.** தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதை சித்தரிக்கும்படியாக; *2 பேது; 2;4 மத்; 27;4 லூக்; 15;18,21 யோவான்; 5;14 8;11 9;23 ரோமர்; 2;12 3;23 5;12,14,16 6;15*
*1கொரி;7;28,36 15;34 எபே; 4;26 1 தீமோ;5;20 தீத்து; 3;11 எபி; 3;17, 10;26*
***1 யோவான்; 2;1*** ல் "பாவச்செயலை" சித்தரிக்கும்படியாக.
1 ***யோவான் 3;16*** ல் " தொடர்ந்து பாவத்தை அனுஷ்டிப்பது "
***1 யோவான் 5;16*** ல் "மரணத்துக்கு ஏதுவான நிலமையை உருவாக்குகிற ஒரு செயல்"
**ஆ.** இயேசுவுக்கு விரோதமாக பாவம் செய்வது *1 கொரி; 8;12*
**இ.** மனிதனுக்கு விரோதமாக பாவம் செய்வது *மத்; 18; 15,21 லூக்; 17; 3,4 1 கொரி; 8;12*
**ஈ.** யூதபிரமாணங்களுக்கு, தேவாலயத்துக்கு, ராயனுக்கு - விரோதமாக பாவம் செய்வது; *அப்; 25;8*
**உ.** தன் சுய சரீரத்துக்கு விரோதமாக பாவம் செய்வது; *1 கொரி; 6;18.*
எஜமானுக்கு விரோதமாக; *1 பேது; 2;20.*

5. ப்ரோமார்டனோ; **(வினைச்சொல்.)** முன்பு பாவம் செய்த... *2 கொரி; 12;21. 13;2*

வேதாகமத்தில் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் " **பாவம்** " என்னும் வார்த்தை சுமார் 45 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **பாவங்கள்** என்னும் வார்த்தை சுமார் 4 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 49 இடங்களில் 47 இடங்களில் பாவம் என்னும் தமிழ் வார்த்தைக்கான மூல கிரேக்க வார்த்தை " **ஹமர்ஷியா** " ஒரு **பெயர் சொல்லாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.**

இவற்றில் இருந்து நாம் மனதிலாக்க வேண்டியது வேதாகமத்தில் " பாவம் " என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற சொற்கள் **எல்லாம்** ஒரு " **தனிப்பட்ட பாவ செயலை** " குறிப்பிடுவது அல்ல. பல இடங்களில் அது ஒரு **பெயர் சொல்லாக " பாவம் செய்ய தூண்டுகிற சக்தியாக "** குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே படிப்பவர்களும், பிரசங்கிப்பவர்களும், வேதாகமத்தில் ஒரு இடத்தில் "பாவம்" என்ற வார்த்தையை காணும்போது, முதலில் அந்த வார்த்தை எதைக்குறிக்கிறது என்று அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

**பழைய மனிதன். (** *ரோமர் 6:6, எபே 4:22, கொலோ 3:9.)* பழைய மனிதன் என்பது "நம்முடைய தனி மனித சிறப்பியல்பு; நம் பழைய மனிதத்துவம் ( **personality** ). **The old, unrenewed self.** நம் பழைய

ஆதாமில் இருந்து நாம் பெற்றுக்கொண்ட சுபாவம்; புதிய மனிதனுக்குரிய வைகள் தவிர அனைத்தும்; புதிய மனிதன் என்பது, நாம் மீண்டும் பிறந்த போது பெற்றுக்கொண்ட அனைத்தும். ஆகவே புதிய மனிதனுக்குரியவைகள் அல்லாதது அனைத்தும் பழைய மனிதனுக்குரியவைகள்; பாவ சுபாவம் ( **sin nature** ); மரித்துப்போன நம் பழைய ஆவி"

**புதிய மனிதன்.** *(எபே 2:15; 4:24; கொலோ 3:10.)* புதிய மனிதன் என்பது "நாம் மறுபடியும் பிறந்த போது தேவனிடம் இருந்து பெற்றுக்கொண்ட அனைத்தும்; பழைய மனிதனுக்குரியவைகள் அல்லாதது அனைத்தும் புதிய மனிதனுக்குரியவைகள்;புது சுபாவம்; நீதி சுபாவம்; மீண்டும் பிறந்த நம் புதிய ஆவி"

**பாவ சரீரம்.** *(ரோமர் 6:6)* ஆதாமிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட பௌதீக சரீரம். பாவம் உபயோகப்படுத்தும் சரீரம்.

**பாவப்பிரமாணம் (law of sin).**

***ரோம 7:21*** *ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்.*

***ரோம 7:23*** *ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.*

இங்கே "பிரமாணம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க சொல் **"நொமொஸ்" 'nomos'** என்பதாகும். இதன் அர்த்தம் "ஒரு செயலை செய்ய தூண்டுகிற ஆற்றல், ஆதிக்கம், செல்வாக்கு, விசை".

மறுபடியும் பிறந்த ஒருவரிடம் பாவம் (பாவ சுபாவம், பழைய மனிதன் ) இல்லை. ஆனாலும் அவரது மனதிலும், சரீரத்திலும் பழைய மனிதனின் கீழ் செய்த பல பழக்க வழக்கங்கள் அப்படியே இருக்கும். பல வருடங்களாக வாகனம் ஓட்டுபவர்களை பார்க்கும்போது இதை நன்கு புரிந்து கொள்ளலாம். அவர்களது கைகளும் கால்களும் தானாகவே இயங்குவது போல இருக்கும். ஏன் என்றால் இது பல வருட பழக்கம். அது போலவே ஒரு விசுவாசியின் மனதிலும், உணர்வுகளிலும், மனப்பாங்கிலும், பழைய மனிதன் விட்டு சென்ற பல பழக்கவழக்கங்கள் இருக்கும். உதாரணத்துக்கு, அவரைப்பற்றி யாராவது பேசினால் உடனே மனதில் கோபம், தாபம், அல்லது சோர்வு போன்றவை. இவைகள் பழைய மனிதன் - பாவத்தின் **'ஆற்றல், செல்வாக்கு, ஆதிக்கம்'**

**மரணப்பிரமாணம் ( law of death )** *ரோமர் 8:2*

***1கொரி 11:30*** *இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*

மரணம் என்பதன் ஒரு அர்த்தம் "பெலவீனத்தின் உச்சம்". பெலவீனம், வியாதி, மரணம். மரணம் என்பது "என்னால் முடியாது" என்பதன் உச்ச கட்டம்.

தேவனுடைய சித்தத்தை பொறுத்த வரையில், என்னிடம் "மரண சரீரம்" இருக்கிறது என்று பவுல் குறிப்பிடுவது, தேவனுடைய சித்தத்தை மாமிசப்பிரகாரமாக நிறைவேற்றுவது என்பது, தன்னால் முற்றிலும் முடியாது என்பது.

பழைய மனிதனின் மனப்பாங்கு, பழக்கங்கள் இருக்கிற மாம்சத்தை கொண்டு தேவனுடைய சித்தத்தை ஒரு போதும் நிறைவேற்ற முடியாது. இது ஒரு விசை, ஆற்றல் போல செயல் படுகிறது. ஒரு காரியத்தில் அல்ல, மற்றொரு காரியத்தில் அல்ல, எப்போதும் எல்லாவற்றிலும் முழுமையாக முடியாது.

**மனதின் பிரமாணம். ( Law of mind )** *(ரோமர் 7:23.)*

நம்முடைய மனதின் ஆற்றல், ஆதிக்கம், செல்வாக்கு, விசை.

**ஜீவனுடைய ஆவியின் பிரமாணம். ( Law of the Spirit of life )** *(ரோமர் 8:2.)*

பரிசுத்த ஆவியின் ஆற்றல், ஆதிக்கம், செல்வாக்கு, விசை.

**மாம்சம்.** *(யோவான் 3:6, ரோமர் 8:3)*

***யோவா 3:6*** *மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.*

மாம்சம் என்றால் என்ன ? **"மாம்சத்தினால் பிறப்பது மாம்சம்".** அதாவது ஆதாமில் இருந்து, நம் மூதாதையரிடமும் பெற்றோரிடமும் இருந்து எதை எல்லாம் பெற்றுக்கொண்டோமா அது எல்லாம் சேர்த்து மாம்சம். " நம் சரீரம், மனப்பாங்கு, தேவனிடம் இருந்து பெற்றுக்கொள்ளாதது *( 2 கொரி 5:17,18 )* அனைத்தும்".

நம் தேவன் சர்வமும் அறிந்தவர். உலகத்தோற்றமுதல் நமக்காக சகலத்தையும் செய்து வைத்திருந்தார். ஆனாலும், உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவன் செய்தவைகள் யாவும் ஒருவரது வாழ்க்கையில் உண்மையாக நடந்தேற வேண்டுமானால் அவர் விசுவாசிக்க வேண்டும் ( ***ரோமர் 10:9-10; எபே 2:8-10*** )

தேவன் ஆவியாயிருக்கிறார். நிஜமான 'நாம்' ஆவியாயிருக்கிறோம்.

***ரோம 8:9*** *தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்,* ***நீங்கள்*** *மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல்* ***ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்.*** *கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

*10 மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும்,* ***ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.***

மனுக்குலத்தின் எல்லா கேள்விகளுக்கும், தேவனிடம் இருக்கிற ஒரே பதில் " **அவரது புத்திரனான இயேசு கிறிஸ்து** ", என்று தேவன் தன் வேதாகமத்தில் சொல்லியிருக்கிறார் *( யோவான் 13:13,14; 15:16; 16:23; கொலோ 1:16,17; 1 தீமோ 2:5 ).* தேவன், அவருக்கும் நமக்கும் இடையில் நடைபெறுகிற அனைத்து காரியங்களிலும், நம்மை எடுத்து விட்டு அவ்விடத்தில் இயேசுகிறிஸ்துவை வைத்து பலவும் செய்கிறார் *( 1 கொரி 1:30, 2 கொரி 5:21 ).* நமது பாவமன்னிப்புக்காக, நமக்கு பதிலாக இயேசு கிறிஸ்து மரித்தார். நமது விடுதலைக்காக நமக்கு பதிலாக இயேசு வாழ்கிறார். நமக்கு பதிலாக இயேசு சிலுவையில் மரித்து நமக்கு பாவமன்னிப்பை பெற்றுத்தருகிறார். நமக்கு பதிலாக நம்மில் வாழ்ந்து நமக்கு ஜெயம் பெற்றுத்தருகிறார். ஒரு ஜெயம் உள்ள விசுவாச வாழ்க்கை வாழ்வதற்கு நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும் " **தேவன் தன் மகனைப்பற்றியதான அதிக வெளிப்பாடுகள் மூலமாகவே நமது எல்லா கேள்விகளுக்கும் பதில் தருகிறார்** ".

## மனுக்குலத்தின் மூன்று பிரச்சினைகள்

### பாவம், பாவங்கள், பாவப்பிரமாணம். ( sin, sins, power of sin )

ரோமர் ஒன்றாம் அதிகாரத்தில் இருந்து இருந்து 8:39 வரை உள்ள வசனங்கள் பாவம், பாவங்கள் என்ற முதல் இரண்டு பிரச்சினைகளையும், தேவன் எவ்வாறு சரிக்கட்டி இருக்கிறார் என்று விவரிக்கின்றன.
இதை மேலும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

*1. ரோமர் 1:1 - 5:11* வரை உள்ள வசனங்கள், தேவன் எவ்வாறு நம் "பாவங்கள்" என்னும் பிரச்சினைக்கு தீர்வு கண்டார் என்று விவரிக்கின்றன. இந்த "பாவங்கள்" என்பவை நாம் தேவனுக்கு முன்பாக செய்கிற பல பாவச்செயல்கள்.

*ரோம 3:25 தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்,*

*ரோம 4:7 எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.*

*ரோம 4:25 அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.*

*2. ரோமர் 5:12 - 8:39* வரை உள்ள வசனங்கள், தேவன் எவ்வாறு "பாவம்" என்ற பிரச்சினைக்கு தீர்வு கண்டார் என்று விவரிக்கின்றன. இங்கே "பாவம்" என்று குறிப்பிடப்படுவது "**ஒரு மூலக்கோட்பாடாக மனிதனுக்குள் கிரியை செய்யும் சக்தி** ".

*ரோம 5:21 ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது.*
*ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
*7 மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. (ரோம 6:11)*
மனிதன் செய்கிற அனைத்து பாவங்களுக்கும் காரணம் இந்த "**பாவம் என்னும் கோட்பாடே**". பாவங்களுக்காக பாவ மன்னிப்பு தேவை; ஆனால் இந்த பாவம் என்னும் கோட்பாட்டில் இருந்து விடுதலை தேவை. பாவங்கள் மனசாட்சியை பாதிக்கின்றன;பாவம் வாழ்க்கையை பாதிக்கின்றது. ஒருவர் தன் பாவங்கள் அனைத்துக்கும் மன்னிப்பு பெற்றாலும், அவருக்குள் இருக்கிற "**பாவத்தினால்**" அவருக்குள் சமாதானம் நிலைத்திருக்காது.

## இரட்சிக்கப்பட்டவர்களின் ( மறுபடியும் பிறந்தவர்களின் ) இரண்டு பிரச்சினைகள்.

### 1. பாவங்கள். 2. பாவப்பிரமாணம்.

*ரோம 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.*
*ரோம 7:25 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.*

## ஒரு மறுபடியும் பிறக்காத மனிதர் எவ்வாறு பாவம் செய்கிறார் ?

*ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
இங்கே **பாவம்** - பாவம் செய்ய தூண்டுகிற சக்தி ( விசை ).
**பழைய மனிதன்** - ஆதாமிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட மனிதத்துவம் ( மனது, மனம் சம்பந்தப்பட்டவை ).
**பாவ சரீரம்** - ஆதாமிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட பௌதீக சரீரம்.

முதலில், இந்த பாவம் செய்ய தூண்டுகிற சக்தி, மனிதனை பாவச்செயல் செய்யும்படியாக ஈர்க்கிறது, கட்டாயப்படுத்துகிறது. நம் பழைய மனிதன் பாவத்தை நேசிக்கிறவன், பாவத்தோடு ஒத்துழைக்கிறவன். அதனால் அவன், மனிதனின் சரீரத்தை பாவச்செயல்களை செய்யும்படியாக சொல்லுகிறான். இதைக்கேட்டு சரீரம் பாவச்செயல்களை செய்கிறது. ஒரு பாவச்செயலை ஒருவர் செய்யும்போது இம்மூன்றும் அதில் சம்பந்தப்பட்டிருக்கும். **பாவம்** >>> **பழைய மனிதன்** >>> பாவ **சரீரம்** >>> **பாவச்செயல்.**

## ஒரு மறுபடியும் பிறந்த மனிதர் எவ்வாறு பாவம் செய்கிறார் ?

ஒரு மறுபடியும் பிறந்த மனிதரிடம் இப்போது பாவ சுபாவம் அல்லது பாவத்தை நேசிக்கும் பழைய மனிதன் இல்லை. அவன் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு மரித்துப்போனான் ( ***ரோமர் 6:6*** ). அவன் இனிமேல் உயிர்த்தெழ முடியாது. இப்போது பாவம் செய்ய தூண்டுகிற சக்தி (விசை), மறுபடியும் பிறந்த ஒருவரை பாவம் செய்யத்தூண்டும்போது, இந்த சக்திக்கு கீழ்ப்படிகிற, ஒத்துழைக்கிற பழைய மனிதன் இப்போது இல்லை. அதாவது, பாவத்தின் தூண்டுதலுக்கு கீழ்ப்படிந்து, சரீரத்தை பாவம் செய்ய சொல்லுகிற பழைய மனிதன் இப்போது இல்லை. ஆகவே மறுபடியும் பிறந்தவருடைய சரீரத்துக்கு இப்போது பாவச்செயல்களை செய்ய வேண்டிய கட்டாயம், அவசியம், தேவை இல்லை. இப்போது சரீரத்துக்கு பாவம் சொல்லுகிற கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டிய வேலை இல்லை.

***ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.***

நாம் இப்போது பாவத்துக்கு ( பாவம் செய்ய தூண்டுகிற சக்திக்கு ) கீழ்ப்படிந்து அதற்கு ஊழியம் செய்ய ( பாவச்செயலை செய்ய ) வேண்டிய அவசியம் இல்லை. இங்கே "பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக" என்ற வாக்கியத்தில் **"ஒழிந்து"** என்ற வார்த்தையின் கிரேக்க மூல வார்த்தையின் அர்த்தம் 'உபயோகமில்லாமல் ஆக்கப்படுதல், செயல் இழந்து போகுதல் ( Gr. katargeesei - Make without effect, annulled )

இப்போது நம் சரீரம் மற்ற ஊழியங்களை செய்ய முடியும்.

*1கொரி 6:13 .......... சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.........*

*ரோம 6:13 நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.*

இப்படியாக மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி பாவம் செய்ய தேவையில்லை என்றால் **"இன்னும் ஏன் மறுபடியும் பிறந்த பல விசுவாசிகளும் பாவம் செய்கிறார்கள் ? ஏன் பாவச்செயல்களை பல சமயங்களிலும் செய்கிறார்கள் ? ஏன் பாவச்செயல்களை செய்யும்படியாக ஈர்க்கப்படுகிறார்கள் ? ஏன் பலரும் அவர்களது வாழ்க்கை முழுவதும் பாவத்தோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள் ?"**

ஒருவர் பாவம் செய்வதன் தொடக்கம் "ஒரு எண்ணம்". ( ***நீதி 23:7 2கொரி 10:4 ரோம 8:6 பிலி 4:8*** ) எண்ணம் என்பதன் அர்த்தம் "ஏதாவது ஒன்றைப்பற்றி எண்ணிப்பார்ப்பது ". எந்த ஒரு காரியத்தையும் முதலில் அதைப்பற்றி எண்ணாமல் செய்ய முடியாது. நாம் செய்கிற எல்லாமே ஒரு எண்ணத்தில் இருந்துதான் தொடங்குகின்றன. எண்ணங்கள் முக்கியமானவைகள். அவைகள் நம் வாழ்க்கையை நிர்ணயிப்பவை.

நம்முடைய மனதின் எண்ணங்கள் மூன்று மூலஸ்தானங்களில் இருந்து உற்பத்தியாகின்றன.

1. நம் மனம். 2. பரிசுத்த ஆவி. 3. பாவப்பிரமாணம் .

*ரோம 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.*

"பிரமாணம்" என்று, இந்த வசனத்தில் மூன்று முறை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை " **நோமோஸ்** ". இதன் அர்த்தம் " ஒரு செயலை செய்ய தூண்டுகிற ஆற்றல் அல்லது செல்வாக்கு " (வைன்ஸ்). இந்த வசனம் " பழைய மனிதனை " " பாவ சுபாவத்தை " குறிப்பிடுவது அல்ல, மாறாக அதன் ஆற்றலை, ஈர்ப்பை, செல்வாக்கை குறிப்பிடுகிறது. ரோமர் 7:22 ம் வசனத்தில் இதே வார்த்தை தேவனுடைய நியாயப்பிரமாணத்தை குறிப்பிடும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இது தேவனை குறிப்பிடுவது அல்ல, மாறாக அவரது கட்டளைகளின் மூலமாக வருகிற **தேவனுடைய ஆற்றலை, ஈர்ப்பை குறிப்பிடுகின்றன.** அது போலவே 23 ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, " பழைய மனிதனின் ஆற்றல், ஈர்ப்பு, கவர்ந்திழுத்தல், செல்வாக்கு ".

*ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*

நம்முடைய "பழைய மனுஷன்" ( பழைய சுபாவம் ) மரித்து அழிந்து போனான். ஆனால் அவன் ஒரு "சரீரத்தை" விட்டு சென்றான். பழைய மனிதனின் இந்த சரீரம்தான் **" உணர்ச்சிகளும் மனப்பாங்கும், பாவம் உபயோகப்படுத்திய நம் சரீரமும் "**. நாம் நம்முடைய மனதை புதிதாக்குவது வரை இவற்றின் ஈர்ப்பு நம்மேல் இருக்கும். நாம் நேரடியாக பழைய மனிதனோடு உறவாடுவதில்லை, மாறாக அவன் விட்டு சென்ற செல்வாக்கோடு, ஆற்றலோடு, சக்தியோடு உறவாடுகிறோம். நம்முடைய மாம்சத்தின் மூலமாக இது நம்மேல் கிரியை செய்கிறது. **பழைய மனிதனின் இந்த சக்திதான்** " பாவப்பிரமாணம் " **அல்லது** " பாவ சக்தி "

**என்று அழைக்கப்படுகிறது.** இது இருப்பது **"நம் அவயங்களில்".** இது எப்போதும் நம் மனதின் சக்திக்கு விரோதமாய்ப் போராடுகிறது ஆகவே, விசுவாச வாழ்க்கை என்பது, **நம்முடைய மனதை புதிதாக்குவது.** நம்முடைய பழைய சுபாவத்தை வெறுப்பது மாத்திரம் அல்ல.

இந்த பாவப்பிரமாணம் இரண்டு வழிகளில் நம் மனதுக்கு எண்ணங்களை கொடுக்கிறது.

**அ.** அது " நான், என், என்னுடைய," போன்ற பிரதிப்பெயர்களை உபயோகித்து, விசுவாசியின் மனதில் " அவரது எண்ணங்கள் " என்று எண்ணங்களை கொடுக்கிறது.

**ஆ.** மூளையில் உள்ள "மாமிச மாதிரிகளை" ( பழைய பழக்க வழக்கங்களின் ஞாபகத்துளிகள் ) உபயோகித்து, ஒருவருடைய சொந்த மனதில் உற்பத்தியான எண்ணங்களை போன்ற எண்ணங்களை கொடுக்கிறது. ( *பிலி 3:4* உலகத்தின் வழக்கப்படி நடந்து நாம் கற்றுக்கொண்ட பழைய வழிகளை வேதாகமம் " மாமிசம் " என்று அழைக்கிறது.) உதாரணத்துக்கு வாழ்க்கையில் ஒருவர் ஏதாவது ஒரு சூழ்நிலை காரணமாக சோர்ந்திருக்கும்போது, கவர்ந்திழுக்கப்படும்போது, மன வேதனையில் இருக்கும்போது இந்த பாவப்பிரமாணம் நாம் முன்பு பார்த்து ரசித்த ஒரு சினிமாப்பாடலின் வரியை, அனுபவத்தை, சம்பவத்தை மனதில் கொண்டு வரும். அந்த எண்ணத்தை நம் எண்ணம்தான் என நினைத்து அதை நாம் மனதில் எடுத்துக்கொள்வோம். ' எனக்கு இப்படி தோன்றுகிறது, நான் இப்படி உணருகிறேன்' என்று நினைத்துக்கொள்வோம். ஆனால் உண்மையில் இவை ' **நம்** ' எண்ணங்கள் அல்ல, தக்க சமயத்தில் சாத்தானுக்கு உடன்படும் " பாவப்பிரமாணம் " **கொண்டு வருகிற எண்ணங்கள்.** இந்த எண்ணங்களை " **தன்** எண்ணங்கள் " என்று நினைத்து ஏற்றுக்கொள்கிற விசுவாசிக்கு இந்த எண்ணங்கள் " **அவரது சொந்த எண்ணங்களாகி விடுகின்றன ".** பின் அவர் அவற்றின் பின் தன் மனதை பதித்து, தான் எதை செய்ய வேண்டாம் என்று நினைக்கிறாரோ அதையே செய்வார். ( *ரோமர் 7:15* ). பின் இந்த "அவரது **சொந்த எண்ணங்கள்**, இச்சைகளாக உருவெடுத்து, அவர் பாவம் செய்கிறார்.

***யாக் 1:14*** *அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.*
*15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.*

## தேவன் எவ்வாறு பாவம் என்னும் பிரச்சினைக்கு தீர்வு கண்டார் ?

***ரோம 6:6*** *நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
*எபே 4:22, கொலோ 3:9 ( கொலோ 2:11 ).*

பாவத்தின் அதிபதி சாத்தான் ( *யோவான் 8:44; ரோமர் 5:12, 14;6:16; எபி 2:14.* ) சாத்தான் பாவத்தை உபயோகித்து பழைய மனுஷனை, பாவம் செய்யுமாறு தூண்ட வைக்கிறான்.

***ரோம 5:19*** *அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

ஒருவர் பாவம் செய்வதால் பாவிகள் அல்ல, அவர் பாவி என்பதால் பாவம் செய்கிறார். மனிதர் அவர்களது அமைப்பிலேயே பாவிகள், செய்கைகளினால் அல்ல. மனிதர் எப்படி பாவிகளாக்கப்பட்டார்கள் ? ஆதாமின் கீழ்ப்படியாமையினால். அவர்கள் செய்கின்றவற்றால் பாவியாகவில்லை, ஆதாம் செய்து ஆனதனால் பாவிகளாக்கப்பட்டார்கள். மனிதர் நினைக்கலாம் நான் நல்லவன் தான், ஆனால் என் செயல்கள்தான் மோசமானவைகள் என்று. ஆனால் வேத வசனம் மிக தெளிவாக சொல்கிறது " **மனிதன்தான் மோசமானவன், அடிப்படையிலேயே மோசமானவன்". அடிப்படை பிரச்சினை பாவி. அவன் கையாளப்பட வேண்டும்.**

### தேவன் எவ்வாறு பாவம் செய்கிற பாவியை கையாள்கிறார் ?

*ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*

தேவன் எவ்வாறு பாவம் செய்ய தூண்டுகிற பழைய மனுஷனை கையாள்கிறார் என்றால் " **இயேசுவோடு கூட அவனை (பழைய மனுஷனை) சிலுவையில் அறைந்து ".**

**மனிதனுடைய நிலமை.** *ரோமர் 5:12 - 21, அப் 17:26.*

***ரோம 5:19*** *அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

மனுக்குலம் அனைத்துக்கும் தகப்பன் ஆதாம். நம்முடைய ஜீவன் ஆதாமில் இருந்து வருகிறது. நாம் அனைவரும் ஆதாமின் பாவத்தில் பங்காளிகள். நாம் "ஆதாமில்" பிறந்ததால், பாவத்தின் காரணமாக ஆதாம் எவைகளை எல்லாம் பெற்றுக்கொண்டாரோ, நாமும் அவை எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டோம். முக்கியமாக **"ஆதாமின் சுபாவம்"** - பாவியின் சுபாவத்தை பெற்றுக்கொண்டோம். ஆகவே **பிரச்சினை** "நாம், நமது வம்சம், தலைமுறை"; நமது நடத்தை அல்ல. நாம் பிறந்த வம்சத்தை மாற்றாமல் நமக்கு விடுதலை இல்லை. ஆனால் பிரச்சினை என்னவென்றால், நாம் பிறவியிலேயே பாவிகள். நாம் எப்படி நம்முடைய பாவ தலைமுறையில், வம்சத்தில் இருந்து விலக முடியும். நாம் ஆதாமில் பிறந்தவர்கள், எவ்வாறு நாம் ஆதாமில் இருந்து வெளியேற முடியும் ?

இதற்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது. **"நாம் பிறப்பினால் ஆதாமில் இருந்து வந்ததனால், நாம் இறப்பினால்தான் ஆதாமில் இருந்து வெளியேற வேண்டும்".** மரணம்தான் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்படுவதற்கான சிறந்த

திட்டம். நம்முடைய பாவத்துக்கு தீர்வு காண நம்முடைய வாழ்க்கை முடிய வேண்டும். பாவத்துக்கு அடிமைத்தனம் பிறப்பினால் வந்தது; பாவத்தில் இருந்து விடுதலை இறப்பினால் வர வேண்டும். இதுதான் தேவன் வைத்திருக்கிற விடுதலையின் திட்டம். *ரோம 6:7 மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.*

நம் பழைய மனிதன் சாத்தானின் சொல் கேட்டு, நம் சரீரத்தை பாவச்செயல்கள் செய்வதற்கு தூண்டாமல் இருக்க தேவன் தெரிந்தெடுத்த வழி, **"நம் பழைய மனிதனை இயேசுவோடு கூட சிலுவையில் அறைந்து அவனை மரிக்க வைப்பது ".**

நம் பழைய மனிதன் ( நம்முடைய மரித்த ஆவி, நம் பழைய பாவ சுபாவம் ) இயேசுவோடு கூட சிலுவையில் மரிக்க வேண்டுமென்றால், முதலாவது அவன் இயேசுவுக்குள் ஆக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவன் இயேசுவோடு மரிக்க முடியும். அப்படி என்றால் **நம் பழைய மனிதனை, நம்மை இயேசுவுக்குள் ஆக்கியது யார் ? எப்படி ?** *1கொரி 1:30 அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக,*

***"நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.".*** நம்மை, நம் பழைய மனுஷனை இயேசுவுக்குள் வைத்தது தேவன். இது தேவனுடைய செயல். இதை தேவன் செய்திருக்கிறார். அவர் நம்மை இயேசுகிறிஸ்துவுக்குள் வைத்திருக்கிறார். இது நம்மால் செய்ய முடியாது. தேவன் இதை திட்டமிட்டு செயல் படுத்தி இருக்கிறார்.

**"ஆதாமுக்குள்" " இயேசுவுக்குள்"** என்ற வார்த்தைகளின் அர்த்தத்தை கீழ்க்காணும் ஒரு நிகழ்வில் இருந்து நாம் மனதிலாக்கிக்கொள்ளலாம்.

*எபி 7:9 அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், 10 தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.*

ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்த போது, லேவி பிறக்க வில்லை. ஆனாலும் அவன் " ஆபிரகாமின் அரையில் இருந்தபடியினால் " அவனும் ஆபிரகாம் மூலமாக தசமபாகம் கொடுத்தான் என்று கணக்கிடப்பட்டது. இதுதான் **"இயேசுவுக்குள்" "ஆதாமுக்குள்"** என்ற வார்த்தைகளின் அர்த்தம். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்ற முறையில் தன் மொத்த குடும்பத்தையும் தனக்குள் கொண்டிருந்தான். ஆபிரகாம் தசமபாகம் கொடுத்த போது அவனுடைய மொத்த தலைமுறையும் தனித்தனியாக இல்லாமல் எல்லோரும் சேர்ந்து கொடுத்தார்கள். மனித வம்சத்தின் தகப்பன் "ஆதாம்". ஒரு புதிய வம்சத்தின் தகப்பன் "இயேசு கிறிஸ்து".

**ஆதாமில் நாம் எப்படியோ, இயேசுவில் நாம் அப்படியே.**

*ரோமர் 5:12 - 21* வரை உள்ள வசனங்களில் ஆதாமைப்பற்றி மாத்திரம் அல்ல, இயேசுவைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*ரோம 5:19 அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, **ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.***

ஆதாமில், ஆதாமின் சகலத்தையும் நாம் பெற்றுக்கொண்டோம்; அது போலவே இயேசுவில், இயேசுவின் சகலத்தையும் நாம் பெற்றுக்கொள்கிறோம். ஆதாமுக்குள் நாம் வீழ்ந்தோம். ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் அனைவரும் பாவிகளாக்கப்பட்டோம். அவன் மூலமாக பாவமும், மரணமும் மனுக்குலத்துக்குள் நுழைந்து ஆண்டு கொண்டிருந்தது. ஆனால் "இயேசுவின் கீழ்ப்படிதலினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்". ஆதாமுக்குள் நமக்கு ஏமாற்றம்; இயேசுவுக்குள் நமக்கு நம்பிக்கை.

*ரோம 5:20 மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.*

*21 ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது.*

ஆபிரகாமுக்குள் அவரது தலைமுறை முழுவதும் தசமபாகம் கொடுத்தது போல, இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது இயேசுவுக்குள் நாம் அனைவரும் மரித்தோம். இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது நாம் சரீரப்பிரகாரமாக பிறக்க வில்லை. ஆனால் **"அவரில் நாம் இருந்ததால்"** நாம் அவரோடு மரித்தோம்.

*2கொரி 5:14 கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;*

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது நாம் அனைவரும் சிலுவையில் அறையப்பட்டோம். இயேசு சிலுவையில் மரித்த போது நாம் அனைவரும் மரித்தோம். தேவன் மனுக்குலம் முழுவதையும் இயேசு கிறிஸ்துவில் கையாண்டிருக்கிறார். இயேசு அனுபவித்தவைகள் நாம் அனுபவித்தவைகளாயிற்று. **நம் பழைய மனிதன் இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்டு மரித்தாகி விட்டது.**

புது சிருஷ்டி.( புதிய வம்சம், புதிய தலைமுறை, புதிய மனுஷன் )

*ரோம 6:5 ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.*

இயேசுவின் மரணம் நம்மை உள்ளடக்கியது. அதுபோலவே **இயேசுவின் உயிர்த்தெழுதலும் நம்மை உள்ளடக்கிய**து. இயேசுவோடு கூட நம் பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டான். பின் இயேசு

உயிர்த்தெழுந்த போது பழைய மனுஷன் உயிர்த்தெழ வில்லை, புது ஆவி - புது ஜீவன் உள்ள ஒரு புதிய மனுஷன் உயிர்த்தெழுந்தான்.

**பிந்தின ஆதாம், இரண்டாம் மனுஷன்.**

*1கொரி 15:45 அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; **பிந்தின ஆதாம்** உயிர்ப்பிக்கிற ஆவியானார். 1கொரி 15:47 முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; **இரண்டாம் மனுஷன்** வானத்திலிருந்து வந்த கர்த்தர்.*

**"பிந்தின ஆதாம், இரண்டாம் மனுஷன்"** இவ்விரண்டு பெயர்களும் நமக்காக இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்கள். **பிந்தின ஆதாமாக** இயேசு, மனுக்குலம் முழுமையையும் உள்ளடக்கியவர். **இரண்டாம் மனுஷனாக** இயேசு, ஒரு புதிய வம்சத்தின் தலைவர்.

ஆக இங்கே நாம் இரண்டு இணைப்புகளை பார்க்கலாம். **முதலாவதாக** இயேசுவின் மனுக்குலத்துடனான இணைப்பு **"பிந்தின ஆதாமாக"** பெத்லகேமில் தொடங்கி கல்வாரி சிலுவையில் முடிந்தது. ஆதாமின் வம்சமான மனுக்குலம் மொத்தத்தையும் தன்னுள்ளடக்கி, இயேசு கிறிஸ்து அந்த வம்சத்தை நியாயத்தீர்ப்புக்குள்ளும் மரணத்துக்குள்ளும் ஆக்கினார்.

**இரண்டாவதாக** இயேசுவின் மனுக்குலத்துடனான இணைப்பு **"இரண்டாம் மனுஷனாக"** உயிர்த்தெழுதலில் தொடங்கி நித்தியத்தி முடிகிறது. அதாவது அதற்கு முடிவே இல்லை.

**தன் மரணத்தினால், தேவனுடைய திட்டம் நிறைவேற முடியாத முதல் மனிதனை ஒழித்தார். தன் உயிர்த்தெழுதலினால், தேவனுடைய திட்டம் நிறைவேற முடிகிற ஒரு புதிய வம்சத்தின் தலைவராக ஆனார்.**

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது, **பிந்தின ஆதாமாக** அறையப்பட்டார். **முதல் ஆதாமில்** இருந்த அனைத்தும் சேர்க்கப்பட்டு இயேசுவுக்குள் ஒழிக்கப்பட்டது. நாம் இயேசுவுக்குள் அப்போது இருந்தோம். பிந்தின ஆதாமாக இயேசு கிறிஸ்து பழைய மனுக்குல வம்சத்தை முழுவதுமாக ஒழித்தார்; இரண்டாம் மனுஷனாக இயேசு கிறிஸ்து ஒரு புதிய வம்சத்தை உருவாக்கினார். தன்னுடைய உயிர்த்தெழுதலில் இயேசு கிறிஸ்து இரண்டாம் மனுஷனாக ஆனார். நாம் இயேசுவுக்குள் அப்போது இருந்தோம். நாம் பிந்தின ஆதாமாக இயேசுவுக்குள் மரித்தோம். நாம் இரண்டாம் மனுஷனாக இயேசுவுக்குள் ஜீவித்திருக்கிறோம்.

சாத்தானின் தூண்டுதலால், பாவத்தின் ஆதிக்கத்தால் பாவம் செய்ய தூண்டுகிற "பழைய மனுஷன் - பாவ சுபாவம்", ஒரு மீண்டும் பிறந்த மனிதரிடம் இப்போது இல்லை. இப்போது பாவம் பழைய மனுஷன் மூலமாக நம்மை பாவம் செய்ய வைக்க முடியாது. ஏனென்றால் பழைய மனிதன் மரித்துபோனான். அவன் மீண்டும் உயிர்த்தெழ முடியாது. இப்போது நாம் புது சிருஷ்டி. புதிய மனிதன். இனிமேல் பாவம் நம்மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது. பாவம் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் நமக்கு இல்லை. அல்லேலூயா !

இப்படியாக ஆதாமில் இருந்து நம்மை இயேசுவுக்குள்ளாக மாற்றியது, பழைய மனிதனை ஒழித்தது, பாவத்துக்கு நம்மேல் ஆளுகை செய்ய முடியாமல் ஆக்கியது **"இயேசு கிறிஸ்துவின் சிலுவை "**.

## தேவன் எவ்வாறு பாவங்கள் என்னும் பிரச்சினைக்கு தீர்வு கண்டார் ?

*லேவி 17:11 மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.*

*மத் 26:28 இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*

*எபி 9:22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

*1யோவா 1:7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் **சகல பாவங்களையும்** நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.*

வேதாகமம் மனுக்குலம் முழுவதையும் "பாவிகள்" என்று அழைக்கிறது. *( ரோமர் 3:9; 3:23 - 26; 5:8,9)*
பாவம் இவ்வுலகில் பிரவேசித்தபோது அதன் வெளிப்பாடு 'தேவனுக்கு கீழ்ப்படியாமை' ( *ரோமர் 5:19* ). இதன் தொடர்ச்சி குற்ற உணர்வு. கீழ்ப்படியாமையாக பாவம் நுழைந்து தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு பிரிவினையை உண்டு பண்ணியது. இதனால் மனிதன் தேவனை விட்டு பிரிந்தவன் ஆனான். அவனுள் இருக்கிற ஒன்று, தேவனை அவனோடு தொடர்பு கொள்ள விடாமல் செய்தது. அதன் பெயர்தான் **"பாவம்"** என்று வேதாகமம் அழைக்கிறது.

அதனால்தான் தேவன் சொல்லுகிறார் **" யாவரும் பாவத்துக்கு உட்பட்டவர்கள் "** ( *ரோமர் 3:9* ).
இரண்டாவதாக, மனிதனுக்குள் இருக்கும் பாவம் அவனுக்குள்ளாகவே ஒரு குற்ற உணர்வை உண்டு பண்ணுகிறது. அதனால்தான் மனிதன் சொல்லுகிறான் **"நான்.....பாவம் செய்தேன்"** ( *லூக்கா 15:18* ).

மூன்றாவதாக, பாவம், சாத்தானுக்கு மனிதனை தேவனுக்கு முன்பாக குற்றப்படுத்துவதற்கான ஒரு வழியை உண்டு பண்ணுகிறது. அதனால்தான் சாத்தான் சொல்லுகிறான் **'நீ பாவம் செய்தாய்".**
இதனால்தான் சாத்தான் குற்றம்சாட்டுகிறவன் என்று அழைக்கப்படுகிறான் ( ***வெளி 12:10*** ).

மனிதனை மீட்டுக்கொள்ள, தேவனுடைய திட்டத்துக்குள் அவனை மீண்டும் கொண்டு வர, இந்த மூன்று காரியங்களாகிய " **பாவம்** (பாவங்கள்,பாவச்செயல்கள்), **குற்ற உணர்வு, சாத்தானுடைய குற்றம் சாட்டுதல்**" ஆகியவற்றை இயேசு கிறிஸ்து தீர்க்க வேண்டியதாயிற்று. இந்த மூன்று காரியங்களையும் இயேசுவின் இரத்தம் தீர்த்ததாக வேதாகமம் தெளிவாக சொல்லுகிறது.

### தேவனுக்காக இயேசுவின் இரத்தம் செய்தது - பாவங்களுக்கான தீர்வு,

**இரத்தம் முதலில் தேவனுக்காக உள்ளது.** இரத்தம் பிராயச்சித்தத்துக்கு உரியது. நாம் செய்த பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டும், அல்லது நாம் தண்டனைக்குள்ளாக்கப்படுவோம். **அவைகள் மன்னிக்கப்படுவது, தேவன் நாம் செய்தவற்றை கண்டு கொள்ளாமல் இருப்பதனால் அல்ல, அவர் இயேசுவின் இரத்தத்தை காணுவதனால்.** வேதாகமம் முழுவதும் இரத்தம் பிராயச்சித்தத்தோடு தொடர்பு உடையது. ***லேவியராகமம் 16*** ஆம் அதிகாரத்தில், வருடத்துக்கு ஒரு முறை பிராயச்சித்தம் செய்யும் நாளில், பிரதான ஆசாரியன் இரத்தத்தை மகாப்பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுக்கு முன்பாக ஏழுதரம் தெளிப்பார். இந்த பிரதான ஆசாரியன் இயேசுவின் மீட்பின் செயலில் அவரது ஒரு அடையாளம் ( ***எபி 9:12*** ). இந்த இடத்திலும் இன்னும் ***யாத்திரயாகமம் 12:13*** ல் பஸ்கா ஆட்டுக்குட்டியின் **இரத்தமும், தேவன் பார்க்கும்படியாக மாத்திரம் உள்ளது.**

***யாத் 12:13*** *நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.*

***"அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்;"*** இது தேவன் சொல்லுவது. இரத்தத்தில்தான் உயிர் இருக்கிறது(***லேவி 17:11***). தன் சுய நீதியை திருப்தி படுத்த தேவன் அதை கேட்கிறார். "தேவன் இயேசுவின் இரத்தத்தை காண்கிறார்...கடந்து போகிறார்". **இதுதான் நம் அனைத்து பாவங்களுக்குமான பாவ மன்னிப்பு.** தேவன் இயேசுவின் இரத்தத்தை பார்த்து திருப்தி படுகிறார். இயேசுவின் இரத்தம் தேவனை முழுவதுமாக திருப்தி படுத்துகிறது. அதுதான் நம் பாவங்களுக்கான பாவ மன்னிப்பு.

### மனிதனுக்காக இயேசுவின் இரத்தம் செய்தது - குற்ற உணர்வுக்கான தீர்வு.

தேவன் இயேசுவின் இரத்தத்தை மதித்து திருப்தி படுகிறார் என்றால், தேவன் இயேசுவின் இரத்தத்துக்கு கொடுக்கும் மதிப்பை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தம் விலையேறப்பெற்றது என்று தேவன் சொன்னால் அதை அப்படியே நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

***1பேது 1:19*** *குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.*

நம்முடைய பாவங்களுக்கான சம்பளமாகவும், நமது மீட்புக்கான விலையாகவும் இயேசுவின் இரத்தத்தை தேவன் ஏற்றுக்கொண்டார் என்றால், அதை அப்படியே விசுவாசித்து நம் கடன் அடைக்கப்பட்டு விட்டது என்று நாம் ஓய்ந்து இருக்கலாம்.

இயேசுவின் இரத்தம் தேவனை திருப்தி படுத்துகிறது. அப்படியானால் அது நம்முடைய மனசாட்சியையும் சுத்திகரிக்க வேண்டும். ( ***எபி 10:22*** *துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.* )

துர்மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயம் உள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், தேவனுக்கும் நமக்கும் இடையில் ஏதோ ஒன்று தடையாக இருக்கிறது. அதனால்தான் தேவனை நெருங்கும்போது நமக்கு ஒரு துர்மனசாட்சி இருக்கிறது. தேவனுக்கும் நமக்கும் இடையில் இருக்கிற ஒரு தடையை அது நமக்கு நினைவுபடுத்துகிறது. ஆனால் இப்போது இயேசுவின் இரத்தத்தினால் அந்த தடை நீக்கப்பட்டுவிட்டது. இந்த சத்தியத்தை தேவன் தன் வார்த்தையின் மூலமாக நமக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார். இதை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது நம் மனசாட்சி சுத்திகரிக்கப்பட்டு குற்ற உணர்வு நீங்கிப்போகிறது. இப்போது தேவனுக்கு முன்பாக நிற்கும்போது நமக்கு துர்மனசாட்சி இருக்காது.

***எபி 10:2*** *பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும்* ***பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால்,*** *அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?* ***ரோம 4:8 எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ,*** *அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான;.*

### சாத்தானுக்காக இயேசுவின் இரத்தம் செய்தது - சாத்தானுடைய குற்றஞ்சாட்டுதலுக்கான தீர்வு.

***வெளி 12:10*** *அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான்.*

தேவனுடைய மக்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் சாத்தான். அவன் எப்போதும் குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருக்கிறான். ஆனால் இயேசு கிறிஸ்து தன்னுடைய இரத்தத்தின் மூலமாக பிரதான ஆசாரியனாக அவனை எதிர் கொள்கிறார்.

*எபி 9:12 வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.*

*எபி 2:17 அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ( எபி 4:14-15 5:10 7:26 )*

*1யோவா 2:1 என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.*

மனிதன் பாவம் செய்ததால் சாத்தானுக்கு அடிமையானான் ( *ரோமர் 6:16* ). இதனால் தேவன் மனிதனை விட்டு விலகியிருக்க நேர்ந்தது *(ஏசா 59:2, எரே 5:25).* மனிதன் செய்த இக்காரியத்தினால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மனிதனிடம் இருந்த பாவம் தடையாக இருந்தது. இயேசுவின் இரத்தம் அந்த தடையை நீக்கியதால் இப்போது மனிதனும் தேவனும் ஒப்புரவாக்கப்பட்டு விட்டனர். மனிதன் இப்போது தேவனிடம் தயை பெற்றிருக்கிறான். தன்னோடு தேவன் இருக்கிறபடியினால் இப்போது மனிதனால் சாத்தானை எதிர் கொள்ள முடியும்.

*1யோவா 1:7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய **இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும்** நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.*

*எபி 9:14 நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த **கிறிஸ்துவினுடைய இரத்தம்** ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!*

இவ்வசனம் இயேசுவின் இரத்தத்தின் ஊழியத்தின் மகத்துவத்தை தெளிவாக சொல்லுகிறது. ஆகவே இப்போது "நீ பாவம் செய்து விட்டாய், இனி தொடர்ந்து செய்து கொண்டேதான் இருக்க வேண்டும்" என்று சாத்தான் சொல்லும்போது நாம் என்ன செய்ய வேண்டும் ? இயேசுவின் இரத்தத்தில் விசுவாசித்து, அவரது இரத்தம் நமக்கு வாங்கி தந்த நிலைமையை விட்டு அசையாமல், சாத்தானை எதிர்த்து நின்று அவனை விரட்டவேண்டும்

*ரோம 8:33 தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.*

*34 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே.*

இதை கடைசி வரை செய்ய வேண்டும்.

*வெளி 12:11 மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

மனுக்குலத்தின் சகல பாவங்ளையும் தேவன் இயேசுவின் இரத்தத்தினால் மன்னித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால், தேவன் மனுக்குலத்தின் பாவங்கள் என்னும் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கிறார். இவ்வாறு மனுக்குலத்தின் பாவங்களுக்கான பாவமன்னிப்பு பெற்று, பாவங்கள் என்னும் பிரச்சினைக்கு தேவன் தீர்வு காண செய்தது **" இயேசுவின் இரத்தம் ".**

## தேவன் எவ்வாறு பாவப்பிரமாணம் என்னும் பிரச்சினைக்கு தீர்வு காண்கிறார் ?

*ரோம 8:1 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.*

*ரோம 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*

நாம் இரட்சிப்பில் பெற்றுக்கொண்ட ஒரு மாபெரும் ஆசீர்வாதம் **" இயேசு கிறிஸ்துவில் உள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் ".** இந்த பிரமாணம் நம்மை பாவப்பிரமாணத்தில் இருந்து விடுதலையாக்கியிருக்கிறது. இதை கடந்த காலமாக வேதாகமம் குறிப்பிடுகிறது; **"விடுதலையாக்கிற்றே"** என்று.

பிரமாணம் என்பது ஒரு விதி, விசை, சக்தி. அதாவது " நியூட்டனின் இரண்டாம் விதி ", " புவி ஈர்ப்பு விசை " என்று நாம் அழைப்பது. உதாரணத்துக்கு புவி ஈர்ப்பு விசை என்றால் அது உலகம் எங்கும் பொதுவானது. யாரும் அதன் சக்தியில் இருந்து விடுபட்டிருக்க முடியாது. அது ஒரு விதி. இப்படிப்பட்ட ஒரு விசையை நாம் மேற்கொள்ள வேண்டுமானால், அதற்கு எதிராக வேறு ஒரு விசையை உபயோகிக்க வேண்டும். இங்கே, உந்து விசையை உபயோகிக்க வேண்டும். அப்போது விமானம் பறக்கும், ராக்கெட் விண்வெளிக்கு செல்லும். அது போலவே, பாவப்பிரமாணம் எப்படி ஒரு விசையோ, அது போலவே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் ஒரு விசை. இந்த விசையானது இப்போது நம்மில் கிரியை செய்து கொண்டிருப்பதால் இது பாவப்பிரமாணத்துக்கு எதிராக செயல்பட்டு நம்மை அதன் பிடியில் இருந்து விடுவித்திருக்கிறது. ஒரு உந்து விசை எப்படி புவி ஈர்ப்பு விசையில் இருந்து நம்மை விடுவிக்கிறதோ அப்படி. நம் நாட்டில் அனைவரும் மின்சாரக்கட்டணம் செலுத்த

வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் விவசாயத்துக்கு மின்சாரத்தை பயன் படுத்துவோருக்கு அது இலவசம் என்று இன்னொரு சட்டம் இயற்றப்படும்போது, இந்த புதிய சட்டம் விவசாயிகளை பழைய சட்டத்தில் இருந்து பாதுகாக்கிறது. அது போலவே.

ஒரு மனிதன் இரட்சிக்கப்படுமுன்பு அவனிடத்தில் இந்த " இயேசு கிறிஸ்துவில் உள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் " இல்லை. ஆகவே அவன் ' பழைய சுபாவம் ' என்கிற விசைக்கு கீழ்ப்பட்டே ஆக வேண்டும். ஆனால் இரட்சிக்கப்பட்ட ஒருவரிடம் பழைய மனிதன் இல்லை. அவன் விட்டு சென்ற விசையான ' பாவப்பிரமாணத்துக்கு ' எதிராக ஜீவனுடைய ஆவியின் விசை ' இருப்பதனால் அவர் பாவப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. பாவப்பிரமாணம் உங்கள் மனதுக்குள் கொண்டு வருகிற எந்த " எண்ணத்தையும் " நீங்கள் உங்கள் எண்ணமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

" இயேசு கிறிஸ்துவில் உள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் " என்பது இயேசுவில் மரணத்தை எல்லா விதத்திலும் ஜெயித்த உயிர்த்தெழுதலின் ஜீவன் ( *எபே 1:18,19* ) . இயேசு கிறிஸ்து இப்போது பரிசுத்த ஆவியானவராக நம் இருதயங்களில் வாசமாயிருக்கிறார். இப்போது நாம் அவருக்கு நம்மை ஒப்புக்கொடுத்து அவரை முழுமையாக செயல் பட விடுவோமானால், **அவர் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணங்களில் இருந்து நம்மை முற்றுமாக விடுவித்து பாதுகாத்துக்கொள்வார்.**
அப்போது தேவனுடைய பலத்தினால் காக்கப்படுவது என்பதை பற்றி நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம்
***1பேது 1:5*** *கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.*

இப்போது ஒரு விசுவாசிக்கு அவர் விட்டுக்கொடுக்காத வரை பாவப்பிரமாணத்தால் அவர் மேல் எந்த ஆதிக்கமும் செலுத்த முடியாது. தன்னை பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும்படி ஒப்புக்கொடுப்பாரானால், ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் பாவம் மரணம் என்ற பிரமாணங்களில் இருந்து அவரை முழுமையாக பாதுகாத்துக்கொள்ளும்.

இவ்வாறு, தேவன் பாவப்பிரமாணம் என்னும் பிரச்சினைக்கு தீர்வு காண்பது நமக்குள் வாழுகிற **"பரிசுத்த ஆவியானவரால்".**

## இப்போது ஒரு விசுவாசி பாவம் செய்யாமல் ஜீவிப்பது எப்படி ?

### புது சிருஷ்டி.

***2கொரி 5:17*** *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*
சிலுவை முதல் சிருஷ்டியின் முடிவாக இருக்கிறது. மரணத்தில் இருந்து, இரண்டாம் மனுஷனான இயேசுவின் மூலமாக ஒரு புதிய சிருஷ்டி உருவாக்கப்பட்டது. நாம் ஆதாமில் இருந்த போது, ஆதாமில் இருந்த அனைத்தும் நமக்குள் தானாகவே வந்தது, நடந்தது. அது தன்னிச்சையாக நடைபெற்றது. அதற்காக நாம் ஒன்றும் முயற்சி செய்ய வேண்டியதில்லை. அப்போது ஒரு பாவம் செய்வதற்கோ, கோபப்படுவதற்கோ, நாம் நம் மனதை தயார்படுத்த வேண்டியதில்லை. அவைகள் தானாகவே நடந்தன. அது போலத்தான், நாம் இயேசுவுக்குள் இருக்கும்போதும், இயேசுவில் இருக்கும் அனைத்தும் கிருபையினால் நமக்குள் வருகிறது, நடக்கிறது. இதற்காக நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. விசுவாசித்தால் மாத்திரம் போதும்.
ஆனாலும், "இயேசுவுக்குள் இருப்பது எல்லாம் நமக்குள் கிருபையினால் வருகிறது, நடக்கிறது " என்று சொல்வது நடைமுறையில் சாத்தியமா? என்ற கேள்வி நமக்குள் எழலாம். இது எப்படி நடைமுறையில் சாத்தியமாகும் ? நமது அனுபவத்தில் இது எவ்வாறு நடைபெறமுடியும் ? **தேவன் பாவம், பாவங்கள், பாவப்பிரமாணம் ஆகிய பிரச்சினைகளுக்கு ஏற்கனவே தீர்வு கண்டு, ஒரு விசுவாசி பாவம் செய்யாமல் வாழ்வதற்கான அனைத்தையும் செய்து வைத்திருக்கும்போது அதை எவ்வாறு வாழ்க்கையில் அனுபவிப்பது ?**

இது நடைமுறையில், அனுபவத்தில் சாத்தியமாவதற்கான 5 காரியங்கள் ***ரோமர் 6,7,8, கலாத்தியர் 5 ம் அதிகாரங்களில்*** குறிப்பிடப்பட்டுள்ளன. அவை 1. **அறிந்து கொள்ளுங்கள்.** 2. **எண்ணிக்கொள்ளுங்கள் ( கணக்கிட்டுக்கொள்ளுங்கள்).** 3. **உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக** 4. **உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.** 5. **ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.**

### 1. அறிந்து கொள்ளுங்கள்.

***ரோம 6:9*** *மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.* ***10*** *அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.*

நம்முடைய மரணமும், உயிர்த்தெழுதலும் நம் ஆவியில் ஏற்கனவே நிறைவேறியிருக்கிற காரியங்கள். ஆனாலும் அது நம்முடைய வாழ்க்கையின் நடைமுறை அனுபவத்துக்குள் வரவேண்டுமென்றால், இந்த உண்மைகளை நாம் அறிந்திருக்க வேண்டும், அறிந்தவற்றை விசுவாசிக்க வேண்டும். இவ்வசனத்தில், இயேசுவோடு நம்முடைய மரணம் ஒரு முறை சம்பவத்திருக்கிறது, அது மீண்டும் மீண்டும் சம்பவிப்பதில்லை என்ற சத்தியத்தை நாம் அறிந்து கொள்வதே நம்முடைய உயிர்த்தெழுந்த புது வாழ்வின் அடிப்படை என்று பவுல் குறிப்பிடுகிறார். பாவத்துக்கு மரித்த நம் மரணத்தை நாம் தொடர்ந்து நமதாக்கிக்கொள்ள வேண்டும் என்பது உண்மை; ஆனாலும் மீண்டும் மீண்டும் மரிப்பதற்கும், இந்த மரணம் ஏற்கனவே நடைபெற்ற ஒன்று என்று அறிந்து அதன்படி நம் மனதை புதிதாக்கிக்கொள்வதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. அதை நாம்தான் செய்ய வேண்டும்.

எப்படி இயேசு கிறிஸ்து பாவத்துக்கென்று ஒரே தரம் மரித்ததால் மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லையோ, அது போலவே ஒரு மனிதன், இயேசுவோடு தான் பாவத்துக்கு ஒரே தரம் மரித்திருக்கிறேன் என்று அறிந்து கொண்டால் பாவம் இனி மேல் அவரை ஆண்டு கொள்ள முடியாது. ஒரு விசுவாசி பாவத்தோடு போராடிக்கொண்டிருக்கிறார் என்றால் அவர் பாவத்துக்கு மரித்ததை அறிந்து கொள்ள வில்லை என்று அர்த்தம்.

## 2. எண்ணிக்கொள்ளுங்கள் ( கணக்கிட்டுக்கொள்ளுங்கள் )

*ரோம 6:11 அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.*

**எண்ணிக்கொள்ளுங்கள்.....பாவத்திற்கு மரித்தவர்களாக..**

எண்ணிக்கொள்ளுங்கள் என்பதற்கான கிரேக்க வார்த்தை "லோகிசோமை" என்பதாகும். இதன் அர்த்தம் "கணக்கெடுப்பது" " மதிப்பிடுவது ". இது ஒரு கணக்கு வார்த்தை. இதன் மற்றொரு அர்த்தம் "கணக்கு புத்தகத்தில் குறிப்பது ". இது ஏற்கனவே இருக்கின்ற ஒரு நிலமையை கணக்கில் எடுப்பது.

ஆகவே, பாவத்துக்கு (பாவம் செய்ய தூண்டுகிற சக்திக்கு) மரித்தது என்பது ஒரு விசுவாசிக்கு ஏற்கனவே இருக்கிற நிலமை, ஆனாலும் அதன் பலன் நமக்கு கிடைக்க வேண்டுமென்றால் அதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு நமது பெயரில் ஒரு வங்கியில் 1 கோடி ருபாய் போடப்பட்டிருக்கிறது என்றாலும், அதை நாம் நமது கணக்கில் எடுத்தால்தான் அது நமக்கு உபயோகமாக இருக்கும். அதைப்பற்றி சற்றும் நினைக்காமல் இருந்தால் அதைக்கொண்டு நமக்கு உபயோகம் இல்லை.

**எண்ணிக்கொள்ளுங்கள்...... தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக.**

பலரும் நினைப்பது, தாங்கள் பாவத்துக்கு மரித்தவர்கள் என்றால் அப்படியே தேவனுக்கென்று பிழைப்பதும் நடந்து விடும் என்று. இது எப்படி என்றால் சரீர மரணம் அப்படியே சரீர உயிர்த்தெழுதலைக்கொண்டு வரும் என்று நினைப்பது போல. தேவனுக்கு மரித்த பிள்ளைகள் தேவை இல்லை. ஆவிக்குரிய பிரகாரமாக மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்த பிள்ளைகள்தான் தேவனுக்கு தேவை. சுய மரணத்துக்கு மாத்திரம் அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜீவிக்கிற மக்கள், இயேசுவோடு அவர்களது புது வாழ்வை அனுபவிக்க மாட்டார்கள். பழைய மனிதன் விட்டுச்சென்ற காரியங்களை நம் வாழ்க்கையில் இருந்து ஒழிப்பதற்காக நாம் நம் பாவங்கள் மேல் நமது கவனத்தை முழுவதுமாக வைக்க தேவையில்லை, மாறாக உயிர்த்தெழுந்த இயேசுவோடு இருக்கும் நம் இணைப்பின் மேல் நம் முழுக்கவனத்தையும் வைத்தால் போதும்.

ஆகவே இவ்வசனத்தின் படி, நம்முடைய பழைய மனிதன் மரித்துப்போனான் என்று எண்ணி, நம்முடைய புதிய மனிதன் இயேசுவுக்குள் உயிரோடு இருக்கிறர் என்று எண்ணி, தேவனுக்கு பிரியமான காரியங்கள் மேல் மாத்திரம் விருப்பப்பட்டு வாழ வேண்டும். இதை செய்யும் போது நம் உள்ளில் என்ன மாற்றம் நடந்திருக்கிறதோ அதை நம் வெளிப்புறத்திலும் காண்பிக்கும் ஒரு மனிதராக நம் மாற முடியும்.

## 3. உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.

*ரோம 6:12 ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.*

**"உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக"** என்று பவுல் ஒரு கட்டளை கொடுக்கிறார். இதை நம்மால் செய்ய முடியாது என்று இருந்தால் நிச்சயமாக பரிசுத்த ஆவியானவர் இதை நம்மிடம் செய்ய சொல்லியிருக்க மாட்டார். சொல்லுகிறார் என்றால் இதை நம்மால் செய்ய முடியும். "என்னால் என்னை கட்டுப்படுத்த முடியவில்லை" " நான் அறியாமல் செய்து விடுகிறேன் " என்று சொல்வதெல்லாம் பொய். இது சாத்தானின் ஒரு தந்திரமான பொய். பாவம் நம்மை ஆளுகை செய்யதற்கான ஒரே வழி, "நியாயப்பிரமாணம் மூலமாக".

*ரோம 5:20 மேலும், **மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது:** அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.*

*21 ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது.*

தேவனுடைய கிருபையால் நியாயப்பிரமாணத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒரு மனிதனால் பாவத்தை வெற்றிகரமாக தடுக்க முடியும். பாவம் நம்மை மேற்கொள்ள விடாமல் செய்தற்கான வல்லமை "நம்மிடத்தில்" இருக்கிறது. **"நாம்"** தான் பாவம் நம் சரீரத்தில் ஆளுகை செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் இருந்திருந்தால் பரிசுத்த ஆவியானவர் இந்த கட்டளை கொடுத்திருக்க மாட்டார். பாவத்தை தடுக்க முடியாது என்று நினைப்பதுதான் பாவம் செய்வற்கான ஒரு பிரதான காரணம். பாவத்தின் வல்லமை நம்

வாழ்க்கையில் முறியடிக்கப்பட்டு விட்டது. ஒரு விசுவாசி இயேசுவுக்குள் தன் புதிய வாழ்வை மனதிலாக்கி தன் மனதை புதிதாக்கும்போது அவர் பாவம் செய்யாமல் இருக்க முடியும்.

*ரோம 6:11 அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.*
நமது பழைய மனிதன் மரித்து போய் விட்டான் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நாம் அறிந்து கொள்ள முடியும். அப்போதுதான் நம் மனதை புதிதாக்கி பாவத்தின் ஆளுகை நம் வாழ்க்கையில் இல்லாமல் செய்ய முடியும்.

## 4. உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

*ரோம 6:13 நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.*
"உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து". இவ்வார்த்தை ஒப்புக்கொடுத்தல் எங்கே தொடங்க வேண்டும் என்று சொல்லுகிறது. பழைய மனிதனுக்குரியது ஒன்றையும் நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க தேவையில்லை. மரித்து உயிர்த்தெழுந்ததை மாத்திரமே தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். உயிர்த்தெழுந்த ஒருவரில் அவரது வாழ்வின் ஆதாரம் தேவன்; தேவனே அவரது ஜீவன்; அம்மனிதரது எல்லாமே தேவனுடையவைகள். தேவனுக்கு ஒப்புக்கொடுப்பது என்பதன் அர்த்தம், நம் வாழ்வு முழுவதும் தேவனுக்கு உரியது என்று மனதிலாக்கி அதன் படி நடப்பது.

## 5. ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.

*கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*
*17 மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.*

நாம் ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளும்போது மாமிசம் நம்மை தொந்தரவு செய்யாது என்று இவ்வசனம் சொல்லவில்லை. மாறாக நாம் ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளும்போது நாம் மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்போம்.
மாம்சத்துக்கு ஏற்றபடி நடக்காமல் இருப்பது ஆவிக்கேற்றபடி நடப்பதாகும் என்றும் இவ்வசனம் சொல்லவில்லை. மாறாக ஆவிக்கேற்றபடி நடந்து கொள்வது மாம்ச இச்சைகளை நிறை வேற்றாமல் இருக்கும். **ஒரு அறைக்குள் வெளிச்சம் வேண்டுமென்றால், இருளை அகற்றி விட்டு வெளிச்சம் கொண்டுவர முடியாது. வெளிச்சம் கொண்டுவரும்போது இருள் தானாக வெளியேறிவிடும்.**

இப்போது கலாத்தியர் *5:24* ல் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம் *"கலா 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."* இவ்வசனம் சொல்லுகிறது, இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட அன்று, ஒரு விசுவாசியின் மாம்சம் ஏற்கனவே சிலுவையில் அறையப்பட்டு விட்டது. அப்படியானால் இப்போது எப்படி மாம்சம் உயிரோடு இருக்க முடியும் ? ஒரு விசுவாசியின் மாம்சம், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு விட்டது என்றால், ஏற்கனவே மரித்து அழிந்து போயிருக்க வேண்டும், அப்படித்தானே ? **பின்னே ஏன் ஒரு விசுவாசி மாம்ச இச்சையை நிறைவேற்றாமல் இருக்க ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும் ?**

இதன் பதிலை பார்க்கு முன்பு, வேதாகமத்தில் ***கலாத்தியர் 5:16-17*** வசனங்களை பார்ப்போம். *"கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*
*கலா 5:17 மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது."*
இங்கே வேதாகமம் சொல்லுகிறது, ஒரு மறுபடியும் பிறந்த விசுவாசியிடம் இன்னனும் மாமிசம் இருக்கிறது. மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசியிடம் பரிசுத்த ஆவி இருக்கிறது, அவர் தேவனுடைய பிள்ளை, இயேசு கிறிஸ்துவினுடையவர். அவரிடம் இருக்கிற மாம்சம், ஆவிக்கு விரோதமாக இச்சிக்கும் அளவுக்கு வல்லமை உடையதாக இருக்கிறது. அப்படியானால் ***கலா 5:16,17 ம், கலா 5:24*** ம் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதா ? **இல்லவே இல்லை.**
**மாம்சத்துக்கு உண்மையில் இரண்டு விதமான பகுதிகள் இருக்கின்றன.** 1. பாவப்பகுதி 2. சுயப்பகுதி.
**இயேசுவின் சிலுவை மாம்சத்தின் பாவப்பகுதியை சரிக்கட்டுகிறது. பரிசுத்த ஆவியானவர் சிலுவையின் மூலமாக மாம்சத்தின் சுயப்பகுதியை சரிக்கட்டுகிறார்.**

இயேசு கிறிஸ்து, தன் சிலுவையின் மூலமாக, விசுவாசிகளை பாவப்பிரமாணத்திலிருந்து முற்றிலுமாக விடுவித்திருக்கிறார். இதனால் **பாவத்துக்கு** இனிமேல் விசுவாசியின் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது. இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் மூலமாக விசுவாசிகளுக்குள் வாழ்ந்து, அவர்கள் தங்களது **சுயத்தின்** மேல் ஆதிக்கம் செலுத்தி முற்றிலுமாக அவருக்கு கீழ்ப்படியும்படியாக செய்கிறார். பாவத்தில் இருந்து

விடுவிக்கப்படும் காரியம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டாகி விட்டது, என்றாலும், ஒரு விசுவாசி தன்னுடைய சுயத்தை வெறுக்க வேண்டிய காரியம் அநுதினமும் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது.

*1பேது 2:11 பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி,*

**ஆவிக்கேற்றபடி நடப்பது எப்படி ? " நம்முடைய வாழ்க்கையை, செயல்களை, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி செய்வதே** " ஆவிக்கேற்றபடி நடந்து கொள்வது.
***2பேது 1:21** தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.*
தேவனுடைய வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் எழுதப்பட்டவை. ஆவியானவரே சத்தியம் ( *1யோவான் 5:6*). தேவனுடைய வார்த்தையே சத்தியம் *(யோவான் 17:17 ).* இயேசுகிறிஸ்து வார்த்தை மாம்சமானவர் ( *யோவான் 1:1-3, 14* ) ஆகவே ஆவிக்கேற்றபடி நடப்பது என்பது " **தேவனுடைய வார்த்தையின்படி நம் வாழ்க்கையின் சகல காரியங்களையும் செய்வது.**

## முடிவுரை; மனுக்குலத்தின் மூன்று முக்கிய பிரச்சினைகளும், தேவனுடைய தீர்வும்.

1. பாவம் ( பாவம் செய்ய தூண்டுகிற சக்தி ). தேவன், இந்த பிரச்சினையை தீர்க்க, பாவத்துக்கு கீழ்ப்படிகிற பழைய மனிதனை இயேசுவோடு கூட சிலுவையில் அறைந்து தீர்த்தார். இப்போது பாவத்துக்கு கீழ்ப்படியாத புதிய மனிதன் நம்மிடம் இருப்பதால் நம் மேல் பாவத்துக்கு ஆதிக்கம் செலுத்த முடியாது.
2. **பாவங்கள்.** தேவன், மனுக்குலத்தின் பாவங்கள் அனைத்துக்கும், இயேசுவின் இரத்தம் மூலமாக பாவ மன்னிப்பு தந்து, பாவங்கள் என்னும் பிரச்சினையை தீர்த்தார்.
3. பாவப்பிரமாணம். தேவன், நமக்கு பரிசுத்த ஆவியானவரை தந்து பாவப்பிரமாணத்தில் இருந்து நம்மை விடுவித்து, பாவப்பிரமாணம் என்னும் பிரச்சினையை தீர்க்கிறார்.

.

| | | |
|---|---|---|
| **பாவத்தில் இருந்து விடுதலை** | - | **இயேசுவின் சிலுவையினால்.** |
| **பாவங்களில் இருந்து பாவ மன்னிப்பு** | - | **இயேசுவின் இரத்தத்தினால்.** |
| பாவப்பிரமாணத்தில் இருந்து விடுதலை | - | **பரிசுத்த ஆவியானவரால்.** |

என்ன ஒரு விடுதலை ! முழுமையான விடுதலை ! **அல்லேலூயா** ! இப்போது ஒரு விசுவாசி இவற்றை நன்கு அறிந்து கொண்டால் பாவம், பாவங்கள், பாவப்பிரமாணம் என்னும் பிரச்சினைகள் இன்றி, முழுமையாக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி, ஒரு வல்லமையான விசுவாசியாக வாழலாம் *(யோவா 14:12) .* கிறிஸ்தவ ஜீவிதத்துக்கும் மற்ற மத ஜீவிதங்களுக்கும் இருக்கிற ஒரு முக்கியமான வேற்றுமை இது. மற்ற மதங்களில் நாம் எவ்வளவு பாவத்தை எதிர்க்கிறோமோ அவ்வளவு தெய்வத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் என்று போதிக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவத்தில் **தேவனே, "பாவம், பாவங்கள், பாவப்பிரமாணம்" என்னும் பிரச்சினைகளை போக்கி, நாம் சகல விதத்திலும் அவருடைய சித்தத்தின் படியாக வாழும்படியான சகலத்தையும் செய்திருக்கிறார்.** என்ன ஒரு அற்புதமான காரியம் இது. இதுதான் தேவ கிருபை... அன்பு *(1யோவா 4:18) .*
இந்த சத்தியங்களை நாம் அறிந்து கொள்ளும்போது பாவமோ அதன் சம்பளமான நோயோ, வறுமையோ, கோபமோ, துன்பமோ... வேறு எதுவுமோ நம்மை வீழ்த்த முடியாது; தேவனின் அன்பில் இருந்தும் அவரிடம் இருந்தும் நம்மை பிரிக்க முடியாது.

**ஆமென். ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருங்கள்.**

**Bro D. Vergin Kumar**
If you need any clarifications kindly contact me in **deeveekumar@yahoo.com** Ph;00968 25572195, 00968 99663557.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament, Vincent's New Testament Word Studies, Articles - The power of sin is not sin nature, The origin of sin, The power of sin - By Bill Gilham. The Spiritual man - By Watchman nee, The Normal Christian life - by Watchman nee. Vincent's New Testament Word Studies. All bible quotes are from King James Version bible, unless quoted otherwise. In Tamil Bible some verses may be up or down than the quoted verse.

----------------------------------